## நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்திட்டம் - 2016

---

நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட 2011 யூன் 20 ஆந் திகதிய 2733 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 2734 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.05(அ) மற்றும் 4.03(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்ட கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளினதும் 09 மற்றும் 10 ஆம் பகுதிகளினதும் அமுலாக்கல் முகவராக காணப்படுகின்ற அதேவேளை இலங்கை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதிகள் 07 மற்றும் 08 இற்கான அமுல்படுத்தும் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 01 முதல 06 வரையான பகுதிகளினதும் மற்றும் பகுதி 09 மற்றும் பகுதி 10 கீழ் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புக்களை இந்த அறிக்கை கொண்டுள்ளது. நம்பகரமான, போதியளவான மற்றும் வசதியான மின்வலு வழங்கலின் இடப்பரப்பை விஸ்தரித்தல் மற்றும் (அ) கிழக்கு, வட மத்தி, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மின்பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்துதல் (ஆ) கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பின்தங்கிய கிரமங்களிற்கு மின்சாரம் வழங்குதல் (இ) எரிசக்தி வினைத்திறன் முன்னேற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை மேலும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக சேவை வழங்கலின் வினைத்திறனையும் நம்பகத் தன்மையினையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 18,135.45 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர். 162.03 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் 72.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 13,223.84 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர். 118.07 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்ததுடன் மீதி 27.1 சதவீதத்தினைப் பிரதிநிதிப்படுத்துகின்ற ரூபா 4,911.61 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 42.03 மில்லியன் இலங்கை அரசினால் வழங்குவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2011 நவம்பர் 17 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. கடன் பெறுகைகளின் சேமிப்புக்களை பயன்படுத்துவதற்காக செயற்திட்டத்தின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, கடன் காலப்பகுதி 2016 ஒக்தோபர் 30 வரை நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி

நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து ஏற்படுகின்ற செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,198.91 மில்லியன் தொகையான பூர்த்திசெய்யப்பட்ட சிவில் வேலைகளின் பெறுமதி மற்றும ரூபா 489.39 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்களின் கிரயம் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டு செயற்திட்டத்தின் சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருந்த அதேவேளை முறையே ரூபா 233 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு செயற்திட்டத்தின் செலவினமாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீள்செயற்பாட்டு மின்வலு முகாமைத்துவ செயற்திட்டத்துடன் ரூபா 368.51 மில்லியன் பெறுமதியான நடைமுறை வேலைகள் வகைப்படுத்தல் வழுவொன்று காரணமாக, புதிய காலி மின்வலு பரிமாற்றல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) விநியோக ஒப்பந்தம் அதனைத்தொடர்ந்து ரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன் கடன் வழங்கும் முகவர்க்கு நேரடியாக முற்பணங்கள் திருப்பிச்செலுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரரினூடாக 03 மோட்டார் வாகனங்களின் விநியோகத்திற்கு வெளித்தரப்பினரொருவர்க்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 2.45 மில்லியன் தொகையான முற்பணமொன்று செயற்திட்டத்தின் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கை களில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர். மில்லியன். | ரூபா மில்லியன். | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன். | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன். | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 118.11 | 13,223.84 | 1,817.00 | 14.43 | 2,157.00 | 81.30 | 12,156.50 |
| ஜீஓஎஸ்எல் | 43.92 | 4,911.61 | - | - | - | - | - |
| சீஈபீ | - | - | 138.00 | 0.25 | 37.00 | 12.95 | 1,936.00 |
| **மொத்தம்** | **162.03** | **18,135.45** | **1,955.00** | **14.68** | **2,194.00** | **94.25** | **14,092.50** |

மேற்குறித்த தகவலின் பிரகாரம், ரூபா 13,223.84 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர். 118.11 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 69 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 12,156.50 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 81.30 மில்லியன் மாத்திரம் செயற்திட்டத்தின் காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்ககூடிய தகவலின் பிரகாரம், புதிய காலி மின்வலு பரிமாற்ற அபிவிருத்திகளின் கீழுலுள்ள வேலைகள், வடகிழக்கு மின்வலு பரிமாற்றம், ஊவா மாகாணத்திலுள்ள கிராமிய மின்மயமாக்கல் மற்றும் விநியோக முறைமை, மொரகல்ல நீர்வலு நிலையத்தின் அண்ணளவாக 30 (MW) வாவி இயக்க நீர்வலு நிலையத்தின் விபரமான பொறியியல் வடிவமைப்பொன்றின் மீள்செயல்படுத்தல் மின்வலு முகாமைத்துவம் மற்றும் தயாரிப்பு என்பன 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. கிரிபத்கும்புற மின்விநியோக துணைநிலைய செயற்திட்டத்தின் விரிவாக்கல், ஊவா மாகாண மற்றும் அம்பாறையிலுள்ள கிராமிய மின்மயமாக்கல் மற்றும் விநியோக முறைமை முன்னேற்ற செயற்திட்டத்தின் விரிவாக்கலுக்கான மூலப்பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகம் மற்றும் 02 பரிமாற்ற வரிசைகளின் மீள்நிர்மாணத்திற்கான மூலப்பொருட்களின் கொள்வனவுக்கு பயன்படுத்துவதற்கு எதிர்பாக்கப்பட்ட கடன் வருமானத்தின் ரூபா 1,118.50 மில்லியன் மீதி செலவு செய்யப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது. பெறப்பட்ட தகவலின் பிரகாரம், இலங்கை மின்சார சபையின் நிதிசார் சிரமங்கள் காரணமாக கிரிபத்கும்புற மின்விநியோக துணைநிலையத்தின் விரிவாக்கலின் கீழுலுள்ள வேலைகளின் செயலாற்றல் 67 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் ஊவா மாகாண மற்றும் அம்பாறையிலுள்ள கிராமிய மின்மயமாக்கல் மற்றும் விநியோக முறைமை முன்னேற்ற செயற்திட்டத்திற்கான மூலப்பொருட்களின் பெறுகை மற்றும் பரிமாற்ற நிர்மாண செயற்திட்ட கிளையின் கீழுலுள்ள 02 பரிமாற்ற வரிசைகளின் மீள்நிர்மாணத்திற்கான மூலப்பொருட்களின் பெறுகை மீதான இலக்குகள் பின்னடைந்த நிலையில் காணப்பட்டது.

### 3.3 நிதிக்கட்டுப்பாட்டு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையில், செயற்திட்டத்தினால் நடாத்தப்படும் சிவில் வேலைகள் மீது பொறியியலாளர்களின் மதிப்பீடு மிகை மதிப்பிடப்படுகின்றதுடன் சிவில் வேலைகளின் ஒப்பந்தங்கள் தாழ்ந்த கிரயங்களையுடைய ஒப்பந்தகாரர்களுக்கு அளிக்கப்படுகின்றது. அந்த உண்மை 2016 யூலை 18 இன் பிஈ/ரீஈஎன்/எஸ்சீஏபிசீ/எஸ்ஜீ/2015/41 ஆம் இலக்க மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் செயலாளரினால் அவரின் கடிதத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தங்களின் மிகை மதிப்பிட்டுக் கிரயம் காரணமாக, அந்தத் திகதியில் உள்ளவாறு ரூபா 1,118.50 மில்லியன் தொகையொன்று செலவிடப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை அமுல்ப்படுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 12.35 மில்லியன் தொகையான ஒப்படைப்புக் கட்டணங்கள் நிதி வழங்கும் முகவரினால் அறவிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை மின்சார சபையினால் ரூபா 497.99 மில்லியன் கிரயமொன்றில் பரிமாற்ற நிர்மாண நோக்கங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் கிரயங்களில், செய்யப்படாத வேலைகள் மற்றும் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட மிகை மதிப்பீடுகளின் காரணமாக செயற்திட்டத்தினால் சேமிக்கப்பட்டவை நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறா சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(ஈ) கிராமிய மின்மயமாக்கல் மற்றும் விநியோக முறைமை முன்னேற்ற வேலைகளின் கீழ் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 1,087.53 மில்லியன் கூட்டுத்தொகையான அபிவிருத்தி செலவினம் முன்னிலைப்படுத்தல் தவறு காரணமாக ரூபா 563.24 மில்லியனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.